அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044-2814 3306, 2814 3307, fax : 044-4212 4624, e-mail : orsk14@gmail.com

**அ.எண் :**176/2016
**தேதி.:**20/11/2016

**உத்தரப்பிரதேச மாநில ரயில் விபத்து**
**அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின்**
**நிறுவனத் தலைவர் ஆர்.சரத்குமார் இரங்கல்.**

உத்தரப்பிரதேச மாநிலம் கான்பூர் நகரில் இருந்து சுமார் 100 கி.மீ தொலைவில் உள்ள புக்ராயன் அருகே அதிகாலை சுமார் 3 மணியளவில், பாட்னா - இந்தூர் விரைவு ரயில் தடம் புரண்டு விபத்துக்குள்ளானது மிகுந்த வேதனை அளிப்பதாக உள்ளது.

இந்த ரயில் விபத்தில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 97-ஆக உயர்ந்துள்ளது. 200-க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.

இந்த கோரவிபத்தில் பலியானோர் குடும்பத்தினர்களுக்கு அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் சார்பாகவும் என் சார்பாகவும் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் காயமடைந்தவர்கள் விரைவில் குணமடையவும் இறைவனை பிரார்த்தித்துக்கொள்கிறேன்.

மேலும் இதுபோன்ற விபத்துக்கள் நடைபெறாமல் இருக்க ரயில் பாதைகளை அவ்வப்போது கண்காணிக்கவேண்டும். தேவையான வசதிகளை ரயில்வே நிர்வாகம் மேற்கொள்ளவேண்டும்.

நன்றி வணக்கம்

உழைப்பவரே உயர்ந்தவர்
என்றும் அன்புடன்

**ஆர்.சரத்குமார்**
நிறுவனத் தலைவர்